முருகப்பெருமான் துணை
ஆசான் அரங்கமகா ஞானியர்க்கு
**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**
பாகம் : 1381
சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,
ஓம் சரவண ஜோதியே நமோ நம
11.07.2023, செவ்வாய்கிழமை

1. ஞான வேலிகொண்ட அரங்கனே
   ஞானிகள் பலங்கொண்ட தேசிகனே
   வானவர்கள் போற்றுகின்ற வள்ளலே
   வையகத்தை ஆளவந்த எந்தன் அவதார ஞானியே
2. ஞானியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   நாட்டிடுவேன் ஞான அறிவுரை ஆசி

(சோபகிருது வருடம் ஆனி மாதம் 26ம் நாள், 11.07.2023, செவ்வாய்கிழமை)

   வானவர்கள் மெச்ச தர்மத்தை
   வாரிவழங்கும் கலியுகத்தின் தர்மனே
3. தர்மனே உன் தர்மபலம்தான்
   தரணியை காத்தருளக் கூடும்
   பெருமைமிக்க உன் சன்மார்க்கம்தான்
   பேருலகை ஒன்றிணைத்து நல்வழி நடத்தும்
4. நடத்துகின்ற இந்த ஞானத்தை
   நம்பிக்கை கொண்டு உலகோர் வரவே
   சலனமற ஆறுமுகன் யான் உந்தன்வழி
   சக்தியாக இறங்கி உலகினுள் அருள்புரிகின்றேன்
5. அருளவே அரங்கன் ஞானம்
   ஆறுமுகனின் பெரு ஞானமாகும்
   இருள்நீக்கி இந்த உலகமக்களை
   இனிதே ஞான ஒளிகாட்டி அவரவரும் ஞானியாக
6. ஆகவே அற்புதத்தை நடத்துகின்ற
   ஆற்றல்மிக்க மார்க்கம் தான் அரங்கன் சன்மார்க்கம்
   மாற்றம் கருதி உலகோர் ஓங்காரக்குடில்நோக்கி
   மண்ணுலகில் சரணடைவு கொண்டால்போதும்

7. ஆற்றல்பட அனைவருக்கும் ஞானசித்தி
அரங்கனால் அடைந்து அழியாமை என்கின்ற
என்கின்ற பேராற்றல் உலகோர் அனைவரும்
இலகுவாய் கண்டு இந்த உலகினிலே

8. எல்லோரும் ஞானியாகி ஞானஆட்சிகாலத்தை
இனிதே அரங்கனோடு இணைந்து படைக்கநேரும்
நேர்மைகொண்ட மக்களெல்லாம் நீதிவழி நடந்து
அரங்கன் தர்மத்தை வரும்காலம் காத்து வருகவருக

9. வருகவே வையகம் தர்ம லோகமாகி
வாழுகின்றகாலமே அவரவரும் ஞானியாக
பலமான தர்ம ஞானஆட்சி பழுதின்றி உலகில் படைத்து
பாடிடுவேன் அரங்கன்வழி அனைவரும் ஆற்றல்மிக்க ஞானவாழ்வுகண்டு சிறப்பர்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–